பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 31 வியாழக்கிழமை 14.03.2024 கதிர் 128

# இந்தியத் தூதரை சந்தித்து பஸில் நேற்று திடீர் பேச்சு

## முஸ்லிம் காங்கிரஸ்டனும் கலந்துரையாடல்

இலங்கைக்கான இந்திய உயர்ஆணையயர் சந்தோஷ் ஜாவுக்கும் பொது ஜன பெரமுனவின் ஸ்தாபகத் தலைவர் பஸில் ராஜபக்சவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று நடைபெ – ற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு நேற்றையதினம் இந்திய உயர்ஆணையரகத்தில் நடைபெற்றுள்ள நிலை – லயில், இந்தச் சந்திப்பின்போது, இருதரப்பு உறவுகள், சமகால அரசியல் விபயங்கள், மற்றும் இரு நாடுகளினதும் நலன்களுடன் தொடர்புடைய விபயங்கள் ஆகியன தொடர்பில் கலந்துரை – ரயாடப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஆணையரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிலிருந்து இந்த மாத தொடக்கத் – தில் நாடு திரும்பிய பஸில் ராஜபக்ச ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பை நடத்தி முதலில் எந்தத் தேர்தலை நடத்துவது என்பது குறித்த பேச்சு இணக்கப்பாட்டை எட்பாத நிலை – லயில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உயர் ஆணையர் சந்தோஷ் ஜா ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்



## இது ரகசியம் அல்ல!

வட்டுக்கோட்டையில் இளம் கும்பஸ்தர் ஒருவர் வெட்டிக் கொ-ால்லப்பட்ட சம்பவம் யாழ்ப்பாணத்-தின் குற்றச் செயல்கள் மற்றொ-ரு கட்டத்திற்குள் நுழைந்திருப்பதைக் காட்-டுகின்றது. இந்தப் போக்கு அனுமதிக்கப்பட்டால் மிக மோசமான எதிர்காலம் ஒன்றே அனைவருக்கும் வாய்க்கும்.

யாழ்ப்பாணத்திற்கு இந்த வாள்வெட்டுக் கலாசாம் ஒன்றும் புதிதல்ல. இங்கு ஆயுத இயக்கங்கள் தோற்றம் பெறுவதற்கு முன்ன-தாக இத்தகைய வாள்வெட்டுக் கும்பல்கள் அப்போதும் இருந்து வந்தி ருக்கின்றன. போதாக்குறைக்கு கூலிக் கொலை செய்பவர்களாகவும் பலர் இருந்திருக்கின்றனர்.

## இலங்கை வங்கிக்கு புதிய தலைவர்

இலங்கை வங்கியின் புதிய தலைவராக காவன் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை தலைவராக செயற்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா, நேற்று முதல் அந்த பதவியில் இருந்து விலகுவதாகவும் புதிய தலைவர் இன்று முதல் கடமைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் வங்கி தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகரான சாகல ரத்நாயக்கவின் சகோதரரான காவன் ரத்நாயக்க கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் பட்டதாரியாவார்.

## ஜேவிபியினருடன் கனேடிய தூதர் சந்திப்பு



மக்கள் விடுதலை முன்னணி தலைமை அலுவலகத்தில் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் இரண்டாவது செயலாளர் (அரசியல்) பெற்றிக் பிக்கரிங்கும் தேசிய மக்கள் சக்தியின் சார்பாக விஜித ஹேரத்தும் பங்கேற்றனர்.

இலங்கையில் நிலவுகின்ற சமூக பொருளாதார மற்றும் அரசியல்

## இலங்கையை எரிசக்தி ஏற்றுமதி நாடாக்க இந்தியாவால் முடியும்

### அந்நாட்டு உயர் ஆணையர் தெரிவிப்பு

இலங்கையின் மின்சார விநியோக முறையை இந்தியாவின் தேசிய கட்டமைப்புடன் இணைப்பதன் மூலம் இலங்கையை எரிசக்தி ஏற்றுமதி செய்யும் நாடாக மாற்ற முடியும் என இலங்கைக்கான இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

நாட்டில் குறைந்த செலவில் எரிசக்தி திட்டங்களில் இந்தியா முதலீடு செய்வதன் மூலம் இந்த நிலையை அடை முடியும் என எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான கூட்டு செயற்குழுவின் முதலாவது கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இது இந்தியாவின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சின் செயலாளர் புபீந்தர் சிங் பாஃலா மற்றும் இலங்கையின் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர்

## வெடுக்குநாறி அத்துமீறல்களுக்காக நாடாளுமன்றைப் புறக்கணியுங்கள்

### தமிழ் எம்.பிக்களுக்கு அழுத்தம்

வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் நடைபெற்ற அரசகட்டமைப்பின் அத்துமீறல்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை நாடாளுமன்றத்தைப்

புறக்கணிக்குமாறு தமிழ்ப் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கோரியுள்ளது.

இது தொடர்பில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் சார்பில் தலைமை ஒருங்கிணைப்பாளர் அகத்தியர் அடிகளார்,நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கோரிக்கை கடிதங்களை அனுப்பியுள்ளார்.

"மகா சிவராத்திரி தினத்தில் வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் நடைபெற்ற அரசகட்டமைப்பின் அத்துமீறல்கள் மற்றும் காவல்துறையினரின் அட்டுழியங்கள் என்பவற்றின்

## உளவு விமானப் பயன்பாடு பற்றி இலங்கைக்கு அமெரிக்கா பயிற்சி

### இரத்மலானையில் நடக்கிறது

அமெரிக்க உளவு விமானத்தை பயன்படுத்தி இந்நாட்களில் இரத்ம லானை விமான நிலையத்தில் விசேட பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்தின் தலையீட்டுடன் இந்த பயிற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான இந்த விமானத்தில் அதன் ஊழியர்களும் இரத்மலானை விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளனர். அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான விமானத்துடன் அதன் ஊழியர்களும் இரத்மலானை விமான

## அரச சார்பற்ற நிறுவனங்கள் குறித்த சட்டமூலத்துக்கு எதிர்ப்பு

இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கான புதிய சட்டமூலத்திற்கு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பிரதிப்பணிப்பாளர் மீனாட்சி

## பண்ணைக் கடலுக்குள் பாய்ந்த பொலிஸ் வண்டி



பொலிஸாரின் முச்சக்கர வண்டி ஒன்று யாழ்ப்பாணம் பண்ணை கடலிற்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது அதிவேகமாக பயணித்ததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ். பல்கலை பட்டமளிப்பை நேரலையில் பார்வையிடலாம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா ,இன்று தொடங்குகின்றது.அதன் முதலாவது பகுதி மார்ச் 16 வரை மூன்று நாள்கள் பல்கலைக்கழக உள்ளக

## புத்தாண்டுக்கு முன்னர் அரசிக்கு நியாய விலை

### வேண்டும் என்கிறார் கபீர் ஹசீம் எம்.பி.

புத்தாண்டுக்கு முன்னர் அரசிக்கு நியாயமான விலையை ஆளும் தரப்பினர் அறிவிக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபிர் ஹசீம்,

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். "அரிசி உற்பத்தியில் தன்னிறைவடைந்துள்ளதாகக் கூறிய

## வட்டுக்கோட்டைப் பவிதரன் கொலை சந்தேகநபர்களை விசாரிக்க அனுமதி

### பொலிஸாருக்கு வழங்கியது நீதிமன்றம்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் வாள்வெட்டில் இளைஞன் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஐவரை பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் விசாரணை நடத்த வேண்டியிருப்பதால் அவர்களைத் தமது காவலில் எடுத்துக்கொள்ள பொலிஸார் அனுமதி கேட்டனர். நீதிவான் 24 மணி நேரம் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க அனுமதி

## கடன் வழங்குநருடனான பேச்சில் ஐ.ம.சக்தியையும் இணையுங்கள

### ஹர்ஷ டி சில்வா எம்.பி. வலியுறுத்து

கடன் வழங்குனர்களுடனான பேச்சுக்களில் ஐக்கிய மக்கள் சக்தியையும் (ஐமுச) எம்மையும் இணைத்துக் கொள்ளுமாறு கோருகின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசினார் அவர். அங்கு மேலும் தெரிவித்ததாவது:

## இனி இது .....

ஆனால், இயக்கங்களின் எழுச்சியின் பின்னர் அத்தகைய கும்பல்கள் எல்லாம் அடக்கப்பட்டன. அல்லது இயக்க உறுப்பினர்களிடம் இருந்த துப்பாக்கிகள் மீதான அச்சம் காரணமாக அவையாகவே அடங்கிப் போயின.

வட்டுக்கோட்டைச் சம்பவம் யாழ்ப்பாணம் மீண்டும் 40 வருட காலத்திற்குப் பின்னோக்கிச் சென்றுகொண்டிருப்பதற்கான கட்டியம். இதுவரையில் வாள் வெட்டுச் சம்பவங்கள் பரஸ்பர குழு மோதல்களின் விளைவாகவே இடம்பெற்று வந்தன. அவற்றில் ஈடுபடுபவர்கள் எதிராளியை வெட்டிக் காயப்படுத்துவதை நோக்காகக் கொண்டே செயற்பட்டு வந்தார்கள். எதிராளியைத் திட்டமிட்டுக் கொல்வது அவர்களின் நோக்கமல்ல.

ஆனால் சம்பவ இடத்தில் உணர்ச்சி மேலீட்டால் ஏற்படக்கூடிய தவறுகள் சில சமயங்களில் இத்தகைய வாள்வெட்டு இறப்புக்களை கடந்த காலங்களிலும் ஏற்படுத்தியிருக்கின்றன.

வட்டுக்கோட்டைச் சம்பவம் அதைத் தாண்டிய ஒரு பரிமாணத்திற்கு நகர்ந்துள்ளது. காத்திருந்து கடத்திச் சென்று கொல்வது குற்றவாளிகளின் நோக்கமாக இருந்திருக்கிறது. பழிக்குப் பழி அல்லது கூலிக்கான கொலை எதுவாக இருந்தாலும் வட்டுக்கோட்டைச் சம்பவத்தின் பின்னால் திட்டமிட்ட கொலை நோக்கம் தெளிவாக இருந்துள்ளது. இது இனி பழிக்குப் பழி என்கிற திட்டமிட்ட கொலைகளை நோக்கி இந்த குழு மோதல்கள் அனைத்தையும் வழிநடத்தும். இந்த ஆபத்தான போக்குக்கு உடனடியாகக் கடிவாளம் இடப்படாவிட்டால் யாழ்ப்பாணம் ஒரு கொலைக்களமாவதைத் தடுக்க முடியாமல் போகும்.

வட்டுக்கோட்டைச் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரையும் தூக்கிலிடுவது போன்ற மிகக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டால் தவிர, இந்தப் போக்குக்கு முற்றுப்புள்ளி வைப்பது மிகக் கடினமாகிவிடும்.

இந்தக் கொலை மற்றொரு கேள்வியையும் எழுப்பியுள்ளது. யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படைகள் எதற்கு இருக்கின்றன என்கிற கேள்வி அது. தாம் பொது மக்களின் பாதுகாப்புக்காகவே வடக்கு கிழக்கில் இருப்பதாக முப்படையினரும் தெரிவித்து வருகின்றனர். கொழும்பில் சிங்கள அரசியல் தலைவர்களும்கூட அதே கருத்தைத்தான் பல சமயங்களிலும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், வட்டுக்கோட்டையில் கொல்லப்பட்ட பவிதரனும் அவரது மனைவியும் தம் மீது தாக்குதல் நடத்தச் சிலர் முற்பட்ட நிலையில் பாதுகாப்புத் தேடி கடற்படைக் காவலரணுக்குள் நுழைந்தபோது அங்கிருந்து விரட்டப்பட்டார்கள் என்று கூறப்படுவது, படையினர் இங்கு யாருடைய பாதுகாப்புக்குத் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் என்கிற கேள்வியை எழுப்புகின்றது.

பொது மக்கள் பாதுகாப்புத்துறை அமைச்சரும் கடற்படைத் தளபதியும் பதலளிக்கவேண்டிய கேள்வி இது. உயிராபத்தான நிலையில் தஞ்சமடைந்தவர்களை வெளியே விரட்டிவிட்டது மட்டுமல்ல அவர்கள் கண்முன்னே கடத்திச் செல்லப்பட்டபோதும் எது வித நடவடிக்கையும் எடுக்காது இருந்த கடற்படையினரும் இந்தக் கொலையில் பங்காளிகளாகக் கொள்ளப்பட்டு குற்றவிசாரணை வளையத்துக்குள் கொண்டுவரப்படவேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறுவதைத் தவிர்க்க முடியும்.

இடிமின்னல்

## இந்தியத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் ரவூப் ஹக்கீம், செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் உள்ளிட்டவர்களையும் சந்தித்து உரையாடியுள்ளார்.

இதன் போது விசேடமாக அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பிலான உரையாடல்களை மேற்கொண்டதோடு சிறுபான்மையினர் பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஜேவிபியுட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை பற்றி விரிவான உரையாடல் இதன்போது இடம்பெற்றது. அத்தோடு, தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய மக்கள் சக்தியின் திட்டங்கள் பற்றியும் இரு தரப்பினருக்கும் இடையில் கருத்துக்கள் பரிமாற்றிக்கொள்ளப்பட்டன. கனடாவில் வசிக்கின்ற இலங்கையரை சந்திப்பதற்கான அநுர குமார திசாநாயக்கவின் கனடா விஜயத்துக்கு உயர்ஸ்தானிகர் வாழ்த்து தெரிவித்தார்.

## இலங்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாநிதி சுலக்ஷன ஜெயவர்தன ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலின்போது, நாட்டின் மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகள் மற்றும் மக்களை மையப்படுத்திய முதலீடுகள் குறித்து இந்திய பிரதிநிதிகள் விளக்கியுள்ளனர்.

இந்தியாவின் தேசிய பசுமை ஹைட்ரஜன் செயன்முறை குறித்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளதாக இந்திய-இலங்கை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கூட்டுப் பணிக்குழு வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய எரிசக்தி பயன்பாடு மற்றும் மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் பற்றிய உண்மைகளை இந்திய பிரதிநிதிகளிடம் இலங்கை தரப்பு விளக்கியுள்ளது.

2030 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் எரிசக்தி தேவைகளில் 70மூ ஐ பூர்த்தி செய்யும் இலக்கை அடைய இந்திய நிறுவனங்கள் தேவையான முதலீடுகளை செய்யும் என்று இந்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் சூரிய சக்தி, காற்றாலை மற்றும் மின்சார அமைப்பு உள்ளிட்ட பல அமைப்புகளுக்கு அதிகபட்ச தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதற்கும் இந்தியத் தரப்பு ஒப்புக்கொண்டுள்ளது.

அதற்காக இந்தியாவின் தேசிய சூரிய சக்தி நிறுவனம், தேசிய காற்றாலை திறன் நிறுவனம் உள்ளிட்ட பல தரப்பினருக்கு பயிற்சி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## பண்ணைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை வீதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கடலுக்குள் விழுந்த முச்சக்கரவண்டி பெரும் முயற்சிக்கு பின்னர் இழுத்து வெளியே கொண்டுவரப்பட்டது.

விசாரணைக்காக சென்ற கோப்பாய் பொலிஸாரின் முச்சக்கர வண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளானகியுள்ளது.

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளை யாட்டரங்கில் ஒன்பது அமர்வுகளாக நடைபெறவுள்ளது. இந்தப் பட்டமளிப்பு விழாவை நேரலையில் காண்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழாவின் போது 2 ஆயிரத்து 873 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் 46 தங்கப் பதக்கங்கள், 9 புலமைப் பரிசில்கள் மற்றும் 48 பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

பட்மளிப்பு விழா நிகழ்வுகளை பல்கலைக்கழகத்தின் யூரியூப் சனல் மற்றும் முகப்புத்தகம் ஆகிவற்றினூடாக நேரலையில் ஒளிபரப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், இணைக்கப்பட்டுள்ள கீயூ. ஆர் கோர்டை ஸ்கான் செய்வதனூடாக நேரலையில் இடைந்து கொள்ள முடியும் எனவும் துணைவேந்தர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

## கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த காலங்களில் பெறப்பட்ட கடன்களில் பெருமளவானவை கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும், எனவே அவற்றை மீள செலுத்த முடியாது என்றும் சிலர் குறிப்பிடுகின்றனர்.

நாட்டுக்காக பெற்ற கடனை கொள்ளையடித்தது யார் என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும். இந்தச் சம்பவம் சர்வதேச கடன் மறுசீரமைப்பில் எதிர்மறையான தாக்கத்தினைச் செலுத்தும்.

முத்தரப்பு கடன் தொடர்பில் பரிஸ் கிளப் நாடுகளுடன் பேச்சு நடத்தி புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று எட்டப்பட வேண்டும்.

அடுத்த மாதம் வொஷிங்டனில் இடம்பெறவுள்ள சர்வதேச நாணயம் நிதியம், உலக வங்கியுடனான பேச்சுக்களின்போது இது தொடர்பில் பேசவுள்ளதாக ஆளும் தரப்பு தெரிவித்துள்ளது. இவற்றுக்கு அப்பால் சுமார் 17 பில்லியன் வணிகக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பான இணக்கப்பாட்டையும் எட்ட வேண்டியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்னும் சில மாதங்களே பதவிக் காலம் இருக்கிறது. எனவே அடுத்து ஆட்சியமைக்கவுள்ள தரப்புக்கும் அரசியல் கட்சிகளுக்கும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பொறுப்புக்கள் காணப்படுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடன் மறுசீரமைப்புக்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டால், அடுத்து வரும் ஆளும் தரப்பே அந்த ஒப்பந்தத்தை அவ்வாறே செயற்படுத்த வேண்டிய பொறுப்பைக் கொண்டிருக்கும்.

அவ்வாறில்லை என்றால் மீண்டும் வங்குரோத்தடைந்த நாடாக இலங்கை அறிவிக்கப்படும். எனவேதான் அவ்வாறானதொரு நிலைமை மீண்டும் ஏற்படாமலிருப்பதைத் தவிர்ப்பதற்காக சர்வதேச கடன் வழங்குனர்களுடனான பேச்சுக்களில் எம்மையும் இணைத்துக் கொள்ளுமாறு கோரினோம்.

இன்னும் சில மாதங்களில் ஆட்சியைப் பொறுப்பேற்கவுள்ள கட்சி என்ற ரீதியில் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக இதனைக் குறிப்பிடுகின்றோம் என்றார்.

## வட்டுக்கோட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கினார்.

காரைநகருக்கு சென்று விட்டு வட்டுக்கோட்டை திரும்பும்போது 23 வயதான தவச்செல்வம் பவிதரன் காரில் கடத்தப்பட்டு வாளால் குத்திக் கொல்லப்பட்டார்

இந்தக் கொலையுடன் தொடர்புடைய வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நான்கு சந்தேகநபர்கள் புதன்கிழமை கிளிநொச்சி பகுதியில் பதுங்கியிருந்த வேளையில் யாழ்ப்பாண பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன.

உயிரிழந்த இளைஞனைக் கடத்திச் செல்லப் பயன்படுத்தப்பட்ட கார் நேற்று குருதிக் கறைகளுடன் மீட்கப்பட்டது. குறித்த காரில் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் பொல்லுகள், இரும்பு கம்பிகள் என்பனவும் கண்டெடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரொருவரின் காணியில் கார் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் அது கைப்பற்றப்பட்டது.

இதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய மேலுமொரு சந்தேக நபர் வட்டுக்கோட்டை பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர். எனினும் இந்தக் கொலையின் பிரதான சந்தேகநபர் இன்னும் தேடப்பட்டு வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## புத்தாண்டு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு தற்போது கீரிசம்பா அரிசியை இறக்குமதி செய்துள்ளது. சந்தையில் பெரும் அரிசி மாபியாக்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இந்த அரிசி மாபியாக்கள் ஒழிக்கப்பட்டு விவசாயிகளுக்கு சிறந்த விலையில் தமது நெல்லை விற்பனை செய்யக் கூடிய நிலைமையும், நுகர்வோருக்கு நியாயமான விலையில் அரிசியை கொள்வனவு செய்யக் கூடிய நிலைமையும் உருவாக்கப்படும். எவ்வாறிருப்பினும் புத்தாண்டுக்கு முன்னர் ஆளும் தரப்பு நியாயமான அரிசி விலையை அறிவிக்க வேண்டும்” என்றார்.

## உளவு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்திற்கு வருகை தந்துள்ளனர்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க , இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், விமானப்படை தளபதி , கடற்படை தளபதி ஆகியோர் நேற்று இவர்களை வரவேற்றுள்ளனர்.

தேசிய பாதுகாப்பை ஸ்திரப்படுத்தும் வகையிலும் கடல் எல்லையை கணகாணிப்பது தொடர்பிலும் இதன்போது விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது. புலனாய்வுத் தகவல்கள் மற்றும் உளவு செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளது.

இரத்மலானை விமான நிலயத்தை வந்தடைந்த அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்தின் இந்த ஜெட் ரக விமானம் பல நவீன தொழில்நுட்ப சாதனங்களுடன் 40,000 அடிக்கும் அதிகமான உயரத்தில் பறக்கும் திறன் கொண்டதாகும்.

14 மணி நேரம் தொடர்ந்து பறக்கக்கூடிய ஆற்றலை இந்த விமானம் கொண்டுள்ளது. இதேவேளை, இந்த வருடம் ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் இலங்கை விமானப்படைக்கு சுமார் 22 மில்லியன் டொலர் பெறுமதியான நவீன விமானத்தை அமெரிக்கா வழங்கவுள்ளது.

இலங்கை விமானப்படையின் விமானிகள், தொழில்நுட்ப ஊழியர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு அதன் செயற்பாடுகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் விமான நிலைமைகள் தொடர்பில் நடைமுறைப் பயிற்சிகளை வழங்கும் நோக்கில் இந்த பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விமானப்படையின் விமானிகள் மற்றும் பொறியியலாளர்கள் அடங்கிய குழுவொன்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் அமெரிக்கா செல்லவுள்ளதாக விமானப்படை ஊடகப்பேச்சாளர் குஷரூப் கெப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கை விமானப்படையிடம் கடல் மற்றும் தரைவழி கண்காணிப்பதற்காக இரண்டு விமானங்கள் உள்ளன, இந்த புதிய விமானம் கிடைத்த பின்னர், நாட்டின் கடல் பாதுகாப்பு வலுப்பெறும்.

இந்த பயிற்சி தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தளத்தில் பதிவிட்டுள்ளார். மனிதாபிமான உதவி, இடர் நிவாரணம் மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஆகியவற்றினூடாக ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான கூட்டு முயற்சிக்கு அமெரிக்கா ஆதரவு வழங்குவதாகவும் பாதுகாப்பான இந்தோ பசுபிக் பிராந்தியத்திற்காக முன்நிற்பதாகவும் அவர் அதில் பதிவிட்டுள்ளார்.

## அரச சார்பற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கங்குலி மற்றும் அவ்வமைபபின் பொருளாதார நீதி மற்றும் உரிமைகள் பிரிவின் பணிப்பாளர் அர்விந்த் கணேசன் ஆகியோரால் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான செயற்திட்டத் தலைவர் பீற்றர் ப்ஷூருவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

சிவில் சமூக இடைவெளியைத் தீவிரமாக மட்டுப்படுத்துவதுடன், சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச்செயற்திட்ட அமுலாக்கத்தை செயலிழக்கச் செய்யக்கூடிய வகையில் இலங்கை ஆளும் தரப்பால் தயாரிக்கப்பட்டுவரும் புதிய சட்ட வரைபுகளைக் கைவிடுமாறு சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தவேண்டும்.

குறிப்பாக நல்லாட்சியை மேம்படுத்துவதிலும், ஊழலை இல்லாதொழிப்பதிலும் சிவில் சமூகத்தின் வகிபாகம் மிகமுக்கியம் எனினும், அடிப்படை சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் நோக்கில் திட்ட மிட்டு முன்னெடுக்கப்பட்ட அண்மைய கால நடவடிக்கையே உத்தேச அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான (பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல்) சட்டமூலமாகும்.

ஆளும் தரப்பால் அளிக்கப்பட்ட மறுசீரமைப்புசார் உத்தரவாதங்களுக்கு அமைய சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட சுமார் 3 பில்லியன் டொலர் பெறுமதியான உதவித் திட்டமானது இலங்கை, பொருளாதார நெருக்கடியிலிருந்து உடனடியாக வெளிவருவதற்கு உதவியது.

இருப்பினும் அடிப்படை உரிமைகளை மிகத்தீவிரமாக மட்டுப்படுத்தக்கூடிய வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆளும் தரப்பால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் அடுத்த கட்ட முன்னேற்றத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்தன.

கடந்த ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைக் காப்பு சட்டமானது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை வெகுவாகக் கட்டுப்படுத்தக் கூடியவகையிலான சரத்துக்களை உள்ளடக்கியிருக்கின்றது.

அதேபோன்று தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலமானது கருத்து வெளிப்படுத்தலுடன் தொடர்புடைய புதிய குற்றங்களையும், கைது செய்வதற்குரிய தன்னிச்சையான அதிகாரங்களையும் கொண்டிருக்கின்றது.

அடுத்ததாக அரச சார்பற்ற அமைப்புக்களை ஒழுங்குபடுத்துவதற்கு முன்மொழியப்பட்டிருக்கும் சட்டமூலம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் இலங்கையில் சிவில் சமூக செயற்பாடுகளை சுதந்திரமான முன்னெடுக்கமுடியாத நிலை ஏற்படக்கூடும். நாடு கடந்த

12ஆம் பக்கம் பார்க்க...

# பரிசில்கள் வழங்கல்!

(ஹஸ்பர் ஏ.எச்)

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான அலுவலக முகாமைத்துவ போட்டிக்கான சான்றிதழ்களும் மற்றும் பரிசில்களும் வழங்கும் நிகழ்வு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய கீதம் இசைக்கப்பட்டு மங்கள விளக்கேற்றி தொடர்ந்து மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கே.விஜயதாசனால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது.

இதன்போது பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கபில நுவன் அத்துக்கோரல கலந்து கொண்டு சிறப்பித்தார்.

வரவேற்பு நடனம், தனி நடனம், குழு நடனம் மற்றும் பாடல்கள் போன்ற கலை கலாசார நிகழ்வுகள் மேடையை அலங்கரித்தன. இதன் போது சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியவதி கலப்பத்தி, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள், மாவட்ட செயலக பதவி நிலை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பிரதி பிரதம பணிப்பாளர்கள், உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)





# தம்பலகாமத்தில் மகளிர் தின நிகழ்வு

(ஏ.எச் ஹஸ்பர்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தம்பலகாமம் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த மகளிர் தின நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.'அவளுடைய பலம் நாட்டிற்கு முன்னேற்றம்'எனும் தொனிப்பொருளின் கீழ் இம் முறை மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

இதில் பெண் தொழில் சுயமுயற்சியாண்மையாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். இதில் உள்ளூர் உற்பத்தியின் சந்தை மற்றும் பெண்களுக்கான நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வும் இடம் பெற்றதுடன் கலை, கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.

இதில் உதவி பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன், தம்பலகாமம் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் மலர்விழி, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இலங்கை வங்கி கிளை உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். (05)

# பாரம்பரிய மூலிகை சித்த வைத்திய முகாம் களுவாஞ்சிக்குடியில் நடந்தது






(வி.ரி. சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தின் மகளிர் தினத்தையொட்டியதான நிகழ்வுகளின் வரிசையில் பாரம்பரிய மூலிகை சித்த வைத்திய முகாம் நடைபெற்றது.

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தால் மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் வழிகாட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளின் வரிசையில் நான்காவது நிகழ்வாக மகளிருக்கான 'பாரம்பரிய மூலிகை சித்த வைத்திய முகாம்' பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சோதிடரும், பாரம்ப ரிய சித்த வைத்தியருமான கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம் கலந்து கொண்டு பாரம்பரிய மூலிகை மற்றும் சித்த வைத்தியம் தொடர்பான அறிவூட்டலையும், சித்த வைத்திய ஆலோசனையையும் வழங்கியிருந்தார்.

இரு கட்டங்களாக இடம்பெற்ற இந்த வைத்திய முகாமில் காலையில் இடம்பெற்ற நிகழ்வில் அலுவலக உத்தியோகத்தர்களும், பிற்பகல் இடம்பெற்ற நிகழ்வில் சமுர்த்தி சமுதாய அடிப்படை சங்கங்களின் உறுப்பினர்களுமாக நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்திருந்தனர்.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் உட்பட பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்ததுடன், இந்த வைத்திய முகாம் மூலம் தாம் நல்ல ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டதாக பயனாளிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# 'காயல்' தொழில் முனைவோர் மாநாடு கொழும்பில் ஞாயிறன்று கோலாகலம்



காயல் அல்லது இளம் இலங்கை தொழில் முனைவோர் பேரவையின் ரஜத ஜெயந்தி மாபெரும் மாநாடு ஞாயிற்றுக்கிழமை ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த ஆண்டு மாநாடு 25 ஆவது முறையாக நடைபெற்றது.

காயல் அல்லது இளம் இலங்கை தொழில் முனைவோர் பேரவை மார்ச் 10, 1999 இல் ஆரம்பிக்கப்பட்டது. 'இன்றிலிருந்து முழு மனதுடன் தயாராவோம்' என்பதே இந்த ஆண்டு ரஜத ஜெயந்தியின் கருப்பொருளாக அமைந்துள்ளது.

அத்துடன் இளம் இலங்கை தொழில்முனைவோர் பேரவையில் அங்கம் வகிக்கும் நிறுவனங்கள் வருடாந்தம் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பில்லியன் கணக்கான ரூபாவை வழங்குகின்றன.

இலங்கையின் இளம் தொழில்முனைவோர் பேரவையின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள், நாட்டிற்கு இன்றியமையாத அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொடுக்கும் ஏற்றுமதியாளர்களாக உள்ளனர்.

மேலும் நாட்டின் பொருளாதாரத்தின் மறுமலர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத சர்வதேச முதலீடுகள், வர்த்தகங்கள் மற்றும் கூட்டாண்மைகளை வைத்துள்ளனர்.

இங்கு புதிய தலைவர் துஷிர ரதெல்லவுக்கு காயல் அல்லது இளம் இலங்கை தொழில்முனைவோர் பேரவையின் முன்னாள் தலைவர் ரசித் விக்ரமசிங்க புதிய பதவியை வழங்கியமையைக் காணலாம். (05)



# சியாஜுக்கு விருது

(சிபாக் - ஸபீஹா)

இலங்கை இந்திய நட்புறவு ஒன்றியத்தின் 'மலையகம் 200' எனும் தொனிப் பொருளில் சாதனையாளர் விருது வழங்கும் விழா ஞாயிறு மாலை கண்டி கெப்பட்டிபொல மண்டபத்தில் ஒன்றியத்தின் தலைவர் தேசபந்து எம் தீபன் தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவில் கற்பிட்டியைச் சேர்ந்த எம்.எச்.எம் சியாஜ் ஊடகத்துறை மற்றும் சமூகசேவை செயற்பாட்டிற்கான சாதனையாளர் விருதாக 'சிறீ விக்ரமகீர்த்தி ' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் சான்றிதழ், பதக்கம் மற்றும் சால்வை அணிவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

இந்த விருது வழங்கல் விழாவின் பிரதம அதிதியாக முன்னாள் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவும் அதிதியாக தினகரன், வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் டி. செந்தில்வேலவர் ஆகியோருடன் இன்னும் விசேட அதிதிகள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கற்பிட்டி பிரதேசத்தில் சுமார் 24 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் தன்னை அர்ப்பணித்து பல பத்திரிகைகளின் கற்பிட்டி பிரதேச செய்தியாளராகவும் கற்பிட்டி பிரதேசத்திற்கான பத்திரிகைகளாக 'அரவம் ', 'விடியல்' மற்றும் கற்பிட்டியின் முதலாவது மின்னிதழ் பத்திரிகையான 'கருப்புவெள்ளை' என்பவற்றின் பிரதம ஆசிரியராக இருந்து தனி முயற்சி மற்றும் ஒரு சிலரின் உதவிகள் ஊடாக பத்திரிகைகளை வெளியிட்டுள்ள இவர் சமூக சேவை பணியில் 'இஸ்லாமிய இளைஞர் நலன்புரி ஸதகா ஒன்றியம்' மற்றும் 'சமூக அபிவி ருத்தி ஒன்றியம்' , ' நஷ்ர் பவுண்டேஷன் 'என்ற அமைப்புக்களை 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நண்பர்கள் சிலருடன் ஆரம்பித்து இன்று வரை பல்வேறுபட்ட ரீதியில் சமூக சேவை பணிகளையும் இவர் கற்பிட்டியில் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ் விருது வழங்கும் விழாவில் நாடு முழுவதிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 150 விற்பணர்கள் சிறீ விக்ரமகீர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நிறைவேறாத இலக்குகள்

*சர்வதேச நாணய நிதியத்தின் திட்டப்படி இலங்கை கடந்த மாசி மாதம் வரையில் நிறைவேற்றியிருக்கவேண்டிய இலக்குகளில் மூன்றில் ஒரு பகுதி அடையப்படவேயில்லை என்று ஆய்வுகள் கூறுகின்றன. 2024 மாசி மாதத்திற்குள் இவை அனைத்தையும் ஆளும் தரப்பு முடித்திருக்கவேண்டும். ஆனால் முடியவில்லை.*

*ஏற்கனவே நாணய நிதியத்தின் முதல் கட்டக் கொடுப்பனவின் பின்னர் நிறைவேற்றியிருக்கவேண்டிய இலக்குகளில் 20 சதவீதமானவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதனை நிறைவேற்றுவதற்கான கால அவகாசம் பின்னர் நீடிக்கப்பட்டது என்று ஆளும் தரப்பில் அண்மையில் விளக்கம் சொல்லப்பட்டிருந்தது. அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை எதிர்க் கட்சியினர் சந்திப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் இந்த விளக்கத்தை ஆளும் தரப்பு வழங்கியிருந்தது.*

*நிபந்தனைகளில் 'நிறைவேறவில்லை' என வகைப்படுத்தப்பட்டுள்ளவற்றில் பல, நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டவை. தகவல்களை வெளியிடுவது (வெளிப்படைத்தன்மை) மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்தும் சட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பான உறுதிப்பாடுகளும் இதில் அடங்கும். இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் மையமாக மோசமான நிர்வாகத்தை சர்வதேச நாணய நிதியம் அடையாளப்படுத்தியுள்ளது. எனவே அது திருத்தப்பட்டு சரியான முறைமை ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்கிறது நாணய நிதியம்.*

*நிறைவேற்றப்படாமல் உள்ளவற்றுக்கு மேலதிகமாக மேலும் 36மூ இலக்குகள் நிறைவேற்றப்பட்டனவா இல்லையா என்பதே தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது அவற்றின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான தரவு கிடைக்கவில்லை.*

*நான்கு புதிய சட்டங்களை ஏற்றுக்கொள்வது தொடர்பான நடவடிக்கைகள் இன்னும் நிறைவேற்றப்படாமலேயே உள்ளன: (அ) வங்கிச் சட்டத்தின் மீது பாராளுமன்ற அனுமதியைப் பெறுதல் (ஆ) பணவீக்கத்திற்கு கலால் வரிகளின் தானியங்கி குறியீட்டை அறிமுகப்படுத்துதல் (இ) கடன் மேலாண்மை நிறுவனத்தை அமைப்பதற்கான சட்ட மாற்றத்தை ஏற்படுத்துதல் (ஈ) பொது நிதி மேலாண்மை சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல் என்ற நான்கு சட்டங்களையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது. நிர்வாகச் சிக்கல்களைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த நான்கு நடவடிக்கைகளும் இதுவரை புறக்கணிக்கப்பட்டே வருகின்றன.*

*இப்போதே இந்த நிலமை என்றால் இனி தேர்தல் நெருங்க நெருங்க இன்னும் மோசமான நிலமையே ஏற்படும். இந்த ஆண்டு ஏதாவது ஒரு தேர்தல் வரும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், தேர்தலில் வெற்றிகொள்ளும் நோக்குடனான நிவாரணங்கள், விலைக்குறைப்புக்கள், கட்டணக் குறைப்புக்களைத் தாராளமாக எதிர்பார்க்கலாம். இது அரசின் வருவாயைக் குறைக்கும் நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களில் நிறைவேற்ற வேண்டிய பகுதிகள் இன்னும் அடிவாங்குவதற்கான வாய்ப்புக்களே அதிகம்.*

*அத்தகைய மோசமான நிலை ஏற்படுவதற்கு முன்னதாக, நிறைவேற்றப்படவேண்டிய இலக்குகளை அடைவதற்கு அனைத்துத் தரப்பினரும் முயற்சிக்கவேண்டியது இலங்கையின் மீட்சிக்கு அவசியமானது. இல்லையேல் இன்னும் அதள பாதாளத்தை நோக்கிப் போகவேண்டியிருக்கும்.*

# சமூக மாற்றம் தேவை



மதிவதனி

பெண் என்பவள் மனிதப் பிறப்பில் ஒரு பாலினமாக அறிவியல் அடையாளப்படுத்தினாலும் கலாசாரம் என்ற சமூக அடையாளக்குறிக்குள் அகப்படும்போது அவளைச் சர்ந்த மதிப்பீட்டுகள் நாட்டுக்கு நாடு வேறுபட்டனவாகவே இருக்கின்றன.

தாய்மொழியைத் தமிழாகக் கொண்டு வாழ்கின்ற தமிழ்ப் பெண்கள் தமது தாய்நாட்டுக்குரிய பண்பாட்டு விழுமியங்களைத் தமது குடும்பத்திலிருந்து கற்கின்றனர். இங்கு தமது இன அடையாளத்தை மட்டுமல்லாது தமது தலைமுறை ரீதியாக கட்டிக்காட்டப்பட்டுவரும் சாதியம், சமயம், சடங்குகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அறிந்து அவை மட்டுமே சரியானவை என்கின்ற குறுகிய எண்ணத்தை தமது சிந்-



தனையில் நிலைநிறுத்திக்கொள்கின்றனர்.

வீட்டு கலாசாரத்தைக் கடந்து சமூகம் என்கிற பெருவெளிக்குள் தம்மை நிலைநிறுத்துகையில் சமூக பிரஜை என்ற அடையாளம் அவர்கள் மீது பல்வேறுவிதமான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, வீட்டு கலாசாரத்திலிருந்து கற்றவை மட்டுமே சரியெனவும், ஏனையவை பிழையெனவும் பதிந்திருந்த எண்ணத்தின் மீது கல்வி, சமூகவியல் ஆகியவை அறிந்தவற்றை தெளிவுபடுத்த வேண்டிய சூழலை உருவாக்கிவிடுகிறது.

இந்த இடத்தில்தான் பெண் தன்னையொத்த ஏனைய பெண்களுடனும் தன்னை ஒப்பிட்டுப் பார்க்கிறாள். தனது எதர் பாலினத்துக்கு நிகராக இருப்பதில் எது தடையாக உள்ளது என்று ஆழமாக யோசிக்கவும் முற்படுகிறாள். இச்சூழலினால் குடும்ப கலாசாரம், தனது இனத்துக்கான கலாசாரம் என்ற பொதுவெளிக்குள் தன்னை அடக்கிக்கொள்ளவேண்டிய கட்டாயம் எழுகின்றது. தனித்தனி குடும்ப கலாசாரங்களால் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கான சட்ட வரம்புகளை உருவாக்குவதில் ஏற்படும் சிக்கலே இதற்குக் காரணம் எனலாம்.

சமூக சட்டதிட்டங்கள் என்ற போர்வைக்குள் தன் இனத்தை அடக்கிக்கொள்வதன் மூலமாகத் தன் குடும்பக் கலாசாரத்தையும் சேர்த்துக் கட்டிக்காக்க முடியுமென்று மறைமுகமாக நம்புகின்றனர். இந்நிலையில்தான் தமிழ்ப் பெண்கள் தமிழ் சமூக, கலசார, பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக்காக்கும் மாதவம் செய்த மானிடர்களாகக் கருதப்படுகின்றனர். நாகரிகம் வளர வளர, தவறுகள் செய்வதும் வளர்ந்து வருவதாக சமூகவியலாளர்கள் சொல்கின்றனர். அத்தவறுகளை சரிப்படுத்தவே சட்டங்கள் உருவானதாக சட்ட நிபுணர்கள் கூறுகிறார்கள். இந்நிலையில், காலம்காலமாகக் கட்டிக் காப்பற்றப்பட்டு வரும் இனத்துக்கான கலாசாரம் பெண் என்கிற மனித உயிருக்கு எந்த வகையில் கட்டுப்பாடுகளை விதிக்க முற்படுகின்றது என்பதே இன்றைய கேள்வி.

ஆணுக்கான கட்டுப்பாடுகள் அனேகமான தமிழ்க் குடும்பங்களில் அவன் 'ஆண்' என்ற ஆளுமையில் நோக்கப்படுகிறது. இங்கு கட்டுப்பாடுகள் இல்லை அவர்களுக்கான வாய்ப்புக்கள் மட்டுமே வழங்கப்படுகிறது. அந்த வாய்ப்பில் ஆணானவன் தன்னைச் சார்ந்த உடல், உள்ளத் தெளிவுடன் சமூகத்தை எதர்நோக்கும் சமூகப் பிரஜையாக எளிதில் அடையாளம் பதிக்கிறான். இக்காரணத்தினால் தான் வலிமையானவன் எனவும், முதன்மையானவன் எனவும் அவன் கருதுகின்றான். அதனால் கலாசாரம் சார்ந்த பிம்பங்களை பெண்மீது சுமத்திவிட்டு அதற்கான காவலனாக, அல்லது விமர்சனாக ஆண் மாறிவிடுகிறான் எனலாம்.

காலம்காலமாக கட்டிக் காக்கப்படும் கலாசாரம் அழகியல் சார்ந்தது அறி வியலும் சார்ந்தது வரலாற்றுக்கும் வித்தனானது. அதற்காக அதனை ஒரு அடையாளக்குறி மீது சுமத்திவிட்டு விளம்பரம் செய்வதும் வேடிக்கை பார்ப்பதும் வரலாற்றில் பதிக்க முற்படுவதும் முற்றிலும் தவறானது.

எந்த இனமாக இருந்தாலும் இருபாலினருக்குமான குடும்பச் சட்டதிட்டங்களை சரிநிகராகத் தரப்படுத்திட முற்படும் பட்சத்தில் இனத்துக்கான அடையாளங்கள் யாவும் இனிவரும் தலைமுறையினருக்கு தடுமாற்றத்தை ஏற்படுத்தாது. தரம் மட்டுமே உயர்ந்ததாகக் கருதப்படும். ஏனெனில், உலகமயமாக்கல் மூலம் "யாதும் ஊரே யாவரும் கேளிர்"" என்று வாழ்வதனால் மனித ஆளுமையோடு இணைந்ததாக இனத்துக்கான கலாசாரம் நோக்கப்படுகிறது.

கலாசார, பண்பாட்டு பிம்பங்களை இருபாலரும் சரிநிகராகப் பின்பற்றி இன்புற்று வாழவேண்டுமென்றே இத்தலைமுறையினர் விரும்புகின்றனர். உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது என்பது போல எம் கலாசாரத்தின் அடையாளக் குறியீடு இதுவே என்று மீண்டும் மீண்டும் பல கட்டுக்கதைகள் ஊடாக நாம் நிருபிக்க முற்படுகிறோம். ஒன்றுக்குப் பின் ஒன்று முரணாக இருப்பதும், அதை ஒப்புவிப்பதுபோல வரலாற்றுச் சான்றுகள் குவிக்கப்பட்டு வருவதும் ஒருபுறம் இருக்க, தொழில்நுப்ப வளர்ச்சியின் மேன்மையினால் இன்றைய தலைமுறையினர் எதையும் எடுத்த எடுப்பில் நம்பிவிடுவதற்குத் தயாராக இல்லை. அறிவியல் சார்ந்து ஆய்வு செய்து தெளிவினை நோக்கி பயணிக்கும் அளவிற்கு வாய்ப்புகள் அவர்கள் முன்னே விரிந்துகிடக்கின்றன.

இதனால் கேள்விகளுக்குள் இருந்து தெளிவினைத் தேடுகின்றனர். தேவைக்கு ஏற்ப பெண் என்பவளுக்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்திவிட்டு அவளுக்கான சுதந்திரம் கிடைத்துவிட்டது என்பதும், ஆணுக்கு நிகராக அடையாளம் பெற்றுவிட்டாள் என்பதும் உண்மைக்கு முரணாக இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றனர். 'பெண் என்பவள் ஒரு வடிவம்' என்ற மனப்போக்கு மாறவேண்டுமென்பதே இன்றைய தலைமுறையினரின் ஆழமான சிந்தனை. அவள் சார்ந்த உணர்வு அவளுக்கான தேவைகளை, விருப்பு வெறுப்புகளை, பாதுகாப்பினை, சுதந்திரத்தை முன்வைக்கின்றது.

அதற்கான முதல் இடமாக அவளது குடும்பமும், அடுத்த இடமாக அவளை ஏற்று மதிப்புக்கொடுத்து சரிநிகர் பிரஜையாக மதிக்கும் சமூகமும், சட்டதிட்டங்களும் இருக்கவேண்டும். எந்த நாட்டில் வாழ்ந்தாலும், எந்தக் கலாசாரத்தில் வாழ்ந்தாலும் மனிதப் பிறப்பில் இருபாலினமும் இச்சமூகத்தின் தனித்தன்மை பெற்றவர்களே! இருபாலினப் பிரஜைகளும் நிகராகப் பயணிக்கும்போது தெளிவுகொண்ட சமூகத்தைக் கண்கூடாகக் காணமுடிகிறது. இதை உணர்ந்து வாழ்வதே காலத்திற்கு ஏற்ற மாற்றம். இந்த மாற்றமே அன்றே பாரதி சொன்ன 'ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணும்' என்ற அடையாளத் தெளிவோடு கூடிய சமூக மாற்றம்.

காலைக்கதிர் Kalaikkathir

# சிங்கள மொழிக் கற்கை நெறி சம்மாந்துறையில் நிறைவு விழா





(வி.ரி.சகாதேவராஜா)

அரச கரும மொழிகள் திணைக்களத்தால் நடாத்தப்படுகின்ற 150 மணித்தியாலங்களைக் கொண்ட சிங்கள கற்கை பாடநெறி நிறைவு விழா சம்மாந்துறையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வு சம்மாந்துறை வலய சிங்கள பாட வளவாளர் ஏ.எச்.நாஸிக் அஹ்மத் தலைமையில் சம்மாந்துறை அல்அர்சத் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா, கௌரவ அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான பிஎம்வை.அறபாத், ஏஎல்.அப்துல் மஜீத், கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஏ.நஸீர், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, அதிபர் எம்ஏ. றஹீம் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

சிங்கள கற்கை நெறியின் விரிவுரையாளர் சனத் ஜெயசிங்க கலந்து கொண்டு இரு மொழிகளிலும் உரையாற்றியதோடு அவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். சம்மாந்துறை வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் என்று 106 பேர் இந்த 150 மணி நேர பயிற்சி நெறியில் கலந்து கொண்டு நிறைவு செய்துள்ளனர்.

பயிலுனர்களின் ஆடல், பாடல், நாடகம் என்பனவும் மேடையேறின.

விழா முழுக்க முழுக்க சிங்கள மொழியில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# தருமபுரம் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி





தருமபுர மத்திய கல்லூரியின் இல்லத் மெய்வள்ளுநர் திறன் ஆய்வு போட்டியின் முதல் நிகழ்வான மரதன் ஒட்ட நிகழ்வு, கல்லூரி முதல்வர் தலைமையில் நடைபெற்றது.

மத்திய கல்லூரி முன்பாக உள்ள ஏ.35 பிரதானவீதியில் ஆரம்பிக்கப்பட்டு விசுவமடு ரெப்பானா சந்திவறை சென்றடைந்த மீண்டும் தருமபுரம் மத்தியகல்லூரி முன்பாக ஆண்களுக்கானதும் அதேவேளைபெண்களுக்கான மரதன் ஓட்டம் வில்வமடு ரெப்பானா சந்தையில் இருந்து ஆரம்பித்து தர்மபுரம் மத்திய கல்லூரி முன்பாகவும் நிறைவடைந்நமையும் இதில் 110 மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.

(05-113)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 80/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkath

# நாவிதன் வெளியில் மகளிர் தின நிகழ்வு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நாவிதன்வெளி பிரதேச செயலக பெண்கள் சிறுவர் பிரிவு, சமுர்த்தி பிரிவு, கிராம அபிவிருத்தி பிரிவு என்பன இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச மகளிர் தினம் 'அவளுடைய பலம் நாட்டிற்கு முன்னேற்றம்' எனும் தொனிப்பொருளில் உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவஷரூபன் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், விஷேட அதிதிகளாக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் தி.கிருபைராஜா, கணக்காளர் கே. றிஸ்வி யாஹ்சர், டெப்லின் அமைப்பின் இணைப்பாளர் ரி.இளையராஜா ஆகியோரும், கௌரவ அதிதிகளாக நிர்வாக உத்தியோகத்தர் கே. யோகேஸ்வரன், சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எஸ்.சிவம், மேலதிக மாவட்ட பதிவாளர் பு.நித்தியானந்தன், சமுர்த்தி சங்க வங்கிச் சங்க முகாமையாளர் உட்பட, சகல பிரிவுகளினதும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன்,பிரதேசசெயலாளரின் வழிகாட்டலில் ஒரு மாறுபட்ட சிந்தனையுடன், பொருளாதாரத்தில் பங்களிப்பு செய்வது பெண்களா ? ஆண்களா? என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றம் பலரது பாராட்டையும் பெற்றது.பிரதேச செயலக வளாகத்தில் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நிகழ்வின்போது, பிரதேச செயலாளரால் பெண் உத்தியோகத்தர்களுக்கு நினைவு அட்டைகள் மகளிர் தின சிறப்புப் பரிசாக வழங்கப்பட்டதுடன், பட்டி மன்றத்தில் பங்குபற்றியவர்களுக்கும் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டப்பட்டார்கள்.

நிகழ்வின் இறுதியில் கலந்து கொண்ட அதிதிகளுக்க சிறப்புபரிசில்களும் வழங்கப்பட்டன.

(05)

## சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்குக




(கிண்ணியா நிருபர் )

திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்துக்குப்பட்ட சாம்பல் தீவு தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதைத் தவிர்த்து வருவதாகக் கூறுகின்றனர்.

முதலாம் ஆண்டு தொடக்கம் 13-ஆம் ஆண்டு கலைப் பிரிவு வரைக்கும் இயங்குகின்ற இப்ப பாடசாலையில் கடந்த சில மாதங்களாக முக்கிய பாடப்பிரிவுகளுக்கு ஆசிரியர் இல்லை என பெற்றார்கள் தெரிவித்தும் இதுவரைக்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கூறுகின்றனர்.

தரம் மூன்றாம் வகுப்புக்கு இதுவரை வகுப்பாசிரியர் இல்லாததால் அந்த மாணவர் சிலரை பாடசாலைக்கு சில வாரங்களாக அனுப்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கலை பிரிவில் உள்ள தமிழ்மொழி பாடத்துக்குரிய ஆசிரியரும் இதுவரைக்கும் இல்லை எனத் தெரிவிக்கின்றார்.

இதனால் பாடசாலை மீது பாடசாலை நிர்வாகத்தினர் மீதும் பெற்றார்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இந்த நிலைமையை உடனடியாக மாற்றி உடனே மாணவர்களின் நலன் கருதி உரிய பாடத்துக்குரிய ஆசிரியரை நியமித்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பெற்றோர்கள் கேட்கின்றனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

## இலங்கையை வம்சாவளியாக கொண்ட தம்பதியின் சடலங்கள் ஆஸியில் மீட்பு!

ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன், வாரென்டைட் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு அருகில் இலங்கை வம்சாவளியினரான தம்பதியினரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்னின் வடகிழக்கே வாரென்டைட்டில் உள்ள அவர்களது வீட்டுக்கு அருகில் செவ்வாய்க்கிழமை காலை தம்பதியினரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

தம்பதியினருக்குச் சொந்தமானது என்று கூறப்படும் காரின் உள்ளே ஒரு சடலமும் மற்றொன்று அருகிலும் கண்டெடுக்கப்பட்டன.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட 70-80 வயதுக்கு இடைப்பட்ட வயோதிப தம்பதியரே உயிரிழந்துள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது. (05)

## நீதிமன்று முன்பாகவுள்ள விஹாரை உண்டியலை உடைத்து பகலில் திருடிய இரு பெண்கள் கைது!

கொழும்பு, அளுத்கடை நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக உள்ள விஹாரையின் உண்டியலை உடைத்து பணத்தை திருடிய குற்றச்சாட்டில் இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (புதன்கிழமை) பகல் 12.50 மணியளவில் இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் நீதிமன்றத்துக்கு முன்பாக போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த வாழைத்தோட்ட பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்து வாழைத்தோட்டம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (05)

## தனது மகளை இலங்கைப் பெண்ணிடம் ஒப்படைத்து தலைமறைவான சீனப் பெண் கட்டுநாயக்கவில் கைது!

*கட்டுநாயக்க விமான நிலையத்தில் , சீனப் பெண் ஒருவர் தனது மகளை இதுவரை பராமரித்து வந்த இலங்கைப் பணிப்பெண்ணிடம் ஒப்படைத்துவிட்டுத் தப்பிச்செல்ல முயன்றபோது கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் .*

*குறித்த 35 வயதுடைய சீன பெண் , இவர் தனது 58 வயது தாயுடன் டுபாயில் வாடகை வீட்டில் வசித்து வந்துள்ளார் எனவும் இவர் ஒரு சீன பிரபல நடனப் பெண் எனவும் அவருக்கு 3 வயது 6 மாத வயதுடைய இரண்டு மகள்மார்கள் உள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர் .*

*குருணாகல் பகுதியில் வசிக்கும் 53 வயதுடைய இந்த இலங்கைப் பெண், சீனப் பெண்ணின் டுபாயில் உள்ள வீட்டில் தொழில் புரிந்துள்ளதுடன் அவரது பிள்ளைகளையும் பரா மரித்து வந்துள்ளார். இவர் தனது சேவையை முடித்துக்கொண்டு அண்மையில் இலங்கை திரும்பியுள்ளார்.*

*இந்த நிலையில் குறித்த சீன பெண் இவருடை வீட்டில் பணியாற்றிய இலங்கைப் பெண்ணிடம் தொடர்புகொண்டு , தான் இலங்கைக்கு விஜயம் செய்வதாகவும் , அவர்களை அழைத்துச் செல்ல கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருமாறும் கூறியுள்ளார். இந்நிலையில், இலங்கைப் பணிப் பெண் சீன பெண்ணை பார்ப்பதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்திருந்த நிலையில், இந்த சீனப் பெண், அவரது தாய், அவரது இளைய மகள் அனைவரும் டுபாயிலிருந்து விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.*

*கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்து சிறிய நேரத்திலே இந்த சீனப் பெண், தனது இளைய மகளை இலங்கை பணிப்பெண்ணிடம் ஒப்படைத்துவிட்டு விமான நிலையத்திலிருந்து காணாமல் போயுள்ளதாகத் தெரியவந்துள்ளது .*

*இதனையடுத்து டுபாய் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த சீன பெண்ணையும் அவரது தாயையும் கட்டுநாயக்க பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன் இவர்களை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளனர்.*

*(05)*




# எங்களது போராட்டம் வாழ்வாதாரத்துக்கான போராட்டம் தென்கிழக்கு பல்கலை ஊழியர் சங்க தலைவர் காட்டம்





(நூருல் ஹுதா உமர்)

நாங்கள் சொகுசு தேவைகளுக்காக போராடவில்லை. எங்களது போராட்டம் வாழ்வாதாரத்துக்கான போராட்டம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைவரங்களின் காரணமாக எங்களது ஊழியர்கள் தங்களது வாழ்வைக் கொண்டுசெல்ல மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஒரே நிறுவனத்தின் பணியாற்றும் ஒரு தரப்பினருக்கு சம்பள அதிகரிப்பை வழங்கிவிட்டு, எங்களுக்கு வாக்குறுதி தந்து, அரசு ஏமாற்றி வருகின்றது. எங்களது விடயத்தில் அரசு பாகுபாடாக நடந்துள்ளது அப்பட்டமான உண்மை. இவ்வாறான நிலை நீடிக்குமாக இருந்தால் நாங்கள் தொடர் போராட்டம் ஒன்றுக்கு செல்வதைத்தவிர வேறு வழியில்லை என்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜ/டீன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள், நிருவாக உத்தியோகத்தர்கள் சங்கங்கள், கல்விசார் ஆதரவு சங்கங்கள் மற்றும் அரசியல் சங்கங்களின் கூட்டுக் குழுவின் ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில், செவ்வாய்க்கிழமை திடீர் போராட்டம் நேற்று (புதன்கிழமை) அடையாள வேலை நிறுத்தம் நாட்டில் உள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் தொடர்ந்தன.

கல்விசார ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜ/டீனின் தலைமையிலும் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகமது காமிலின் வழிகாட்டலில் இடம்பெற்ற குறித்த அடையாள வேலை நிறுத்த போராட்டத்தின் இரண்டாம் நாளிலும் பெரும் அளவிலான ஊழியர்கள் பங்கு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்று இடம்பெற்ற இப்போராட்டத்தில் வாக்களிக்கப்பட்ட 107 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு, உறுதியளித்த 25 வீத எம்.சி.ஏ. கொடுப்பனவை வழங்கு என்பன போன்ற பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வைத் தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இங்கு ஒற்றுமையே பலம், சமத்துவமே எம் தேவை, அரசாங்கமே கண்முளித்துப்பார், 8 வருட ஏமாற்றம் இன்னும் தொடருமா?, வேண்டாம் வேண்டாம் பாகுபாடு வேண்டாம், புத்திஜீவிகளை உருவாக்கும் அரச ஊழியர்களாகிய நாங்கள் நடுத்தெருவில் என்பன போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.(05)

## கிரிக்கெட் போட்டியில்

*(தில்சாத் பர்வீஸ் )*

*தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உள்ளக மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி இவ்வருடமும் இரண்டாவது பருவ காலமாக மிக விமர்சையாக கட்டுநாயக்க விளையாட்டு மைதானத்தில் இளங்கலை சமூக பணி மூன்றாம் வருட மாணவர்களின் ஏற்பாட்டில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர்*

*கலாநிதி ரவீந்திராவின் வழிகாட்டலில் சமூகப்பணி கல்லூரி பணிப்பாளர் வ. ஜெயஷரூபனின் தலைமையில் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சி.கே டி தப்பிரேவ் அவர்களின் கண்காணிப்பில் மாணவர் நலன்புரி பணிப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் பீ.கே.எஸ் கருணாரத்தனின் அனுமதியுடன், சமூகப் பணி விரிவுரையாளர் த. தர்சனின் ஒருங்கிணைப்பில் அண்மையில் இடம்பெற்றது.*

*இந்த விளையாட்டு நிகழ்வு சிநேக பூர்வ நிகழ்வாகவே இடம்பெற்றதுடன் சமூகப்பணி இளம் கலைமாணி பட்டப் படிப்பைத் தொடரும் மாணவர்கள், கல்விசார் ஊழியர்கள் கல்வி சாரா ஊழியர்கள் என 14 அணிகளைக் கொண்டதாக இரண்டு நாள்கள் இப்போட்டி இடம்பெற்றது.*

*இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக இலங்கை கிரிக்கெட் தேசிய அணியின் முன்னாள் வீரர்களான தம்மிக்க பிரசாத் மற்றும் அஷன் சமரநாயக்க ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இதில் ஆண்களுக்கான போட்டியில் சம்பியனாக முதலாம் வருட சமூகப் பணி இளம் கலைமாணி மாணவர்களும் மற்றும் பெண்களுக்கான தொடரில் சம்பியனாக முதலாம் வருட சமூகப் பணி இளம் கலை மாணி மாணவிகளும் இவ்வருட வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

*இந்நிகழ்வில் வெற்றி பெற்றவர்களுக்கான நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது*

*இந்நிகழ்வில் கல்விசார் ஊழியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் , பார்வையாளர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வின் ஊடக பங்கா ளராக ஆர் ஜே மீடியா கலந்து சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக கது. (05)*

## வெள்ளத்தால் சேதமடைந்த வீதிகளுக்குக் கள வருகை





(கே எ ஹமீட்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அமைந்துள்ள பாலமுனை அரசயடி வீதி, இறா கிராம வீதிகள் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்ததனால் பொது மக்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான இவ் வீதிகளை முன்னாள் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேலதிக மாகாணப் பணிப்பாளர் அலியார், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கல்முனை நிறைவேற்று பொறியியலாளர் எம்.எம்.எம். முனாஸ், அக்கரைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயத்தின் பொறியியல் உதவியாளர் உனைஸ், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் தியாகதீபம் பதுார்டீன் ஆகியோர் கள விஜயம் மேற்கொண்டனர். (05)

## புதுக்குடியிருப்பு விசுவமடுவில் பொலிஸ் விசேட சுற்றிவளைப்பு

பொலீஸ்மா அதிபர் தேசபந்து தென்னைகோனின் எண்ணக் கருவுக்கு அமைவாக நாட்டில் தற்பொழுது போதைப் பொருள் பாவனையை தடுக்கும் நோக்கில் நாட்டில் பல பாகங்களிலும் சுற்றி வளைப்பு நடைபெற்று வரும் நிலையில் அதன் ஓர் அங்கமாக புது குடியிருப்பு பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு பகுதியில் பொலீஸார் மற்றும் அதிரடிப்படையினர் மோப்பநாயின் உதவியுடன் வீதி சோதனை ஒன்றை நேற்று (புதன்கிழமை)மேற்கொண்டிருந்தனர். (05-113)

## வெண் ஈ யைக் கட்டுப்படுத்த உயிரியல் முறையில் முயற்சி





விவசாய திணைக்களத்தின் பயிர்பாதுகாப்பு சேவையின் உதவிப்பணிப்பாளர் பிரபாத் நிசாந்த தலைமையில் கிளிநொச்சி மாவட்டத்தின் திருவையாறு, திருநகர், கிளிநொச்சி நகரம், ஆனந்தபுரம் உள்ளிட்ட பகுதிகளில் குறித்த ஒட்டுண்ணி விடப்பட்டது.

ஒட்டுண்ணிகளை விடும் செயற்பாட்டில் திருநெல்வேலி விவசாய திணைக்களத்தின் ஆராய்ச்சி உதவிப்பணிப்பாளர் எஸ்-இராஜேஸ்கண்ணா,கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் சூ.ஜெகதீஸ்வரி, பாடவிதான உத்தியோகத்தர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (05 - 316)

# நேற்று மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ள ஹொலுவாகொட 'செரின் ரிவர் பார்க்'





காலி, ஹொலுவாகொட 'செரின் ரிவர் பார்க்' சுற்றுச்சூழல் பூங்கா நேற்று (புதன்கிழமை) மாலை 5.00 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

செரின் ரிவர் பார்க் காலி நகரத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள ஹோலுவாகொடவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு கட்டத் தொடங்கிய இந்தப் பூங்கா, 14 ஏக்கர் பரப்பளவில் தரிசு நிலமாக உள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையால் திட்டங்கள் தயாரிக்கபட்டுள்ளதுடன், பூங்காவின் நிர்மாணப் பணிகள் இலங்கை காணி மீட்புக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மதிப்பீடு 440 மில்லியன் ஷரூபாவாகும்.

ஹொலுவகொட செரின் ரிவர் பார்க் ஏரி, நடைபாதைகள், சுரங்கப்பாதைகள், சிறுவர் பூங்காக்கள், கடைத் தொகுதிகள், சுற்றுச்சூழல் அமைப்புகள் போன்றவற்றைறக் கொண்டுள்ளதோடு சூரிய சக்தியால் இயங்குகிறது. விவசாயப் பயிர்கள் மற்றும் உள்ளூர் மக்களின் பிற பொருள்களை மக்களுக்கு விற்பனை செய்யும் திட்டமும் இதன் மூலம் செயற்படுத்தப்படுகிறது.

எதிர்காலத்தில் இந்த பூங்காவில் இருந்து வக்வெல்ல, வட்டரேக மற்றும் காலி வரை சுற்றுலாத்துறைக்கு முன்னுரிமை கொடுத்து படகு சேவை நடத்தப்படும்.

அத்துடன், பல தசாப்தங்களாக ஹொலுவாகொட மற்றும் ஓபாத பிரதேச மக்கள் எதிர் நோக்கும் வெள்ள நிலைமையை இந்த பூங்காவின் மூலம் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

இந்நிகழ்வில் சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(05)

## சிறுமியை கொடுமைக்கு உள்ளாக்கிய குற்றவாளிக்கு 10 வருட கடூழியச் சிறை

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாடசாலை சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றவாளிக்கு நுவரெலியா மேல் நீதி மன்றம் 10 வருட கடூழிய சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

இந்த தீர்ப்பை நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரிய நேற்று (புதன்கிழமை) வழங்கி தீர்ப்பளித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

கடந்த 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நானுஓயா பிரதேசத்தைச் சேர்ந்த நபர், அதே பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுக்கு குறைவான பாடசாலை சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பாக பாடசாலை ஊடாக சிறுமியின் பெற்றோருக்கு தெரியவந்ததையடுத்து இந்த நபர் மீது நானுஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து தற்போது குற்றவாளியாக இனங்காணப்பட்ட நபருக்கு எதிராக நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு விசாரணை செய்யப்பட்ட நிலையில் வழக்கிற்கான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

இதன்போது குற்றவாளிக்கு எதிரான சாட்சியங்களின் அடிப்படையில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட 52 வயதுடைய நபருக்கு நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரிய 10 வருட கடூழிய சிறை தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார்.


அதேநேரத்தில் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஐந்து லட்சம் ஷரூபா நஷ்ட ஈடாக வழங்க வேண்டுமென தீர்ப்பு வழங்கிய நீதிபதி இந்த தொகையை பாதிக்கப்பட்டவருக்கு வழங்காத பட்சத்தில் மேலும் மூன்று வருடங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பில் குறிப்பிட்டார்.

அத்துடன் குற்றவாளிக்கு நீதி மன்ற தண்டனை பணமாக 15 ஆயிரம் ஷரூபா செலுத்த உத்தரவிட்ட நீதிபதி, இந்த தண்டனை பணத்தை செலுத்தாத பட்சத்தில் மேலும் மூன்று மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

(05)

## வரி செலுத்தாத வர்த்தக நிறுவனங்களின் விளம்பரப் பலகைகள் அதிரடி அகற்றம்

### மன்னார் நகர சபை நடவடிக்கை








மன்னார் நகர சபை எல்லைக்குள் அமைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வர்த்தக நிலையங்களில் உரிய அனுமதி பெற்று வரி செலுத்தாது காட்சிப்படுத்தப்பட்ட விளம்பர பலகைகள் நேற்று (புதன்கிழமை) மன்னார் நகர சபை ஊழியர்களால் அகற்றப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையிடம் உரிய வரி செலுத்தி அனுமதி பெறாது உள்ளூர் வர்த்தகர்களின் வர்த்தக நிலையங்களில் நீண்ட நாள்களாக காட்சி படுத்தப்பட்டிருந்த மொபிடெல் நிறுவனம் உள்ளடங்களாக பல்வேறு நிறுவனங்களின் விளம்பர காட்சி பலகைகள் வர்த்தக நிலையங்களில் இருந்து அகற்றப்பட்டுள்ளன.

முன்னதாக இவ்வாறு காட்சிப் படுத்தப்பட்டிருக்கும் விளம்பர பலகைகளுக்கு அனுமதி பெற்று வரியை செலுத்தி காட்சிப் படுத்துமாறு நகரசபையால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு, கடிதங்கள் அனுப்பப்பட்டு உரிய அனுமதியை பெறாத வர்த்தக நிலையங்களின் விளம்பர பலகைகள் மேற்கண்டவாறு அகற்றப்பட்டுள்ளன.

மேலும் நகர சபை எல்லைக்குள் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள சிறு வியாபார வர்த்தக நிலையங்கள், சிற்றுண்டி நிலையங்கள் குளிர்பான நிலையங்களையும் அகற்றுவதற்கான நடவடிக்கைகளையும் மன்னார் நகரசபை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஆயுர்வேத வைத்திய மாணவர்கள் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்





ஆயுர்வேத வைத்திய மாணவர்களால் நேற்று (புதன்கிழமை) சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பொறுப்பற்றவகையில் ஆயுர்வேத வைத்தியர்களுக்கான பதிவுகள் மேற்கொள்வதை உடனடியாக நிறுத்துவதுடன் சலுகைகளுடன் கூடிய வரையறுக்கப்பட்ட வைத்திய பயிற்சிகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (05)

# இளம் குடும்பஸ்தர் கொலைக்கு பயன்படுத்திய கார் யாழில் மீட்பு!



யாழ்ப்பாணம் பொன்னாலை கடற்படை முகாமுக்கு அருகில் இருந்து திங்கட்கிழமை 23 வயதுடைய தவச்செல்வம் பவித்திரன் என்ற குடும்பஸ்தர் கடத்தப்பட்டு வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கொலை குற்றச்சாட்டின் கீழ் ஐந்து சந்தேகநபர்கள் செவ்வாய்க்கிழமை, யாழ்ப்பாண குற்றத்தடுப்பு பொலிஸாரால் கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அவர்கள் கொலை செய்வதற்கு பயன்படுத்திய கார் அராலி மேற்கு நொச்சிக்காட்டு பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் இருந்து, யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. அந்த இடத்திற்கு விரைந்த தடயவியல் பொலிஸாரும் தடயங்களை சேகரித்து வருகின்றனர்.

குறித்த குடும்பஸ்தர் மீது, காரில் வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. பாவனையற்ற வீடு ஒன்றிற்கு முன்னால் இருந்து இந்த கார் மீட்கப்பட்டுள்ளது. குறித்த காரானது நீண்ட காலம் பாவனை இல்லாமல் இருந்தது போல் தூசிபடிந்தவாறு காணப்படுவதுடன், காரின் உள்ளே இரத்தக்கறையும், கொட்டன்களும் காணப்படுகின்றன. (05)

# தெஹிவளையில் ஓட்டோவுடன் அதிசொகுசு கார் மோதி விபத்து

தெஹிவளையில் ஓட்டோவுடன் 'முஸ்டாங்' அதி சொகுசு கார் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து தெஹிவளை களுபோவில பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (05)கொள்ளும் வர்த்தக நிலையங்களில் உரிய அனுமதி பெற்று வரி செலுத்தாது காட்சிப்படுத்தப்பட்ட விளம்பர பலகைகள் நேற்று (புதன்கிழமை) மன்னார் நகர சபை ஊழியர்களால் அகற்றப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையிடம் உரிய வரி செலுத்தி அனுமதி பெறாது உள்ளூர் வர்த்தகர்களின் வர்த்தக நிலையங்களில் நீண்ட நாளாக காட்சி படுத்தப்பட்டிருந்த மொபிடெல் நிறுவனம் உள்ளடங்களாக பல்வேறு நிறுவனங்களின் விளம்பர காட்சி பலகைகள் வர்த்தக நிலையங்களில் இருந்து அகற்றப்பட்டுள்ளன. முன்னதாக இவ்வாறு காட்சிப் படுத்தப்பட்டிருக்கும் விளம்பர பலகைகளுக்கு அனுமதி பெற்று வரியை செலுத்தி காட்சிப் படுத்துமாறு நகரசபையால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு, கடிதங்கள் அனுப்பப்பட்டு உரிய அனுமதியை பெறாத வர்த்தக நிலையங்களின் விளம்பர பலகைகள் மேற்கண்டவாறு அகற்றப்பட்டுள்ளன.

மேலும் நகர சபை எல்லைக்குள் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள சிறு வியாபார வர்த்தக நிலையங்கள், சிற்றுண்டி நிலையங்கள் குளிர்பான நிலையங்களையும் அகற்றுவதற்கான நடவடிக்கைகளையும் மன்னார் நகரசபை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலி!

கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.

மேற்படி விபத்து செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. விபத்தில் பொன்னகர் பகுதியைச் சேர்ந்த சந்தானம் புஸ்பராசா என்ற 34 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகம் அமைந்துள்ள பகுதிக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளை ரிப்பர் வாகனம் மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் உயிரிழந்துள்ளார்.

குறித்த வீதி, கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு போதிய இடவசதி குறைவான நிலையில், ரிப்பர் வாகனங்கள் அதிகளவில் குறித்த வீதியை பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# எல்பிட்டிய சிறுமி படுகொலை பிரதான சந்தேக நபர் கைது!

எல்பிட்டிய பகுதியில் 17 வயது சிறுமி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது, கொலை செய்யப்பட்ட சிறுமி வேறு ஒருவருடன் தொடர்பில் இந்தமையால் கொலை செய்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

பின்னர், சந்தேக நபரை எல்பிட்டிய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய பொலிஸார், சந்தேக நபரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாணயக்கார மாவத்தை பகுதியில் உள்ள தேயிலைத் தோட்டமொன்றில் கழுத்தை அறுத்து கொலை செய்யப்பட்ட 17 வயது சிறுமியின் சடலம் கடந்த 9 ஆம் திகதி பொலிஸாரால் மீட்கப்பட்டது தெரிந்ததே. (05)

# கொழும்பில் இரு பெண்கள் கைது விகாரையில் திருடினார்களாம்

கொழும்பு, அளுத்கடை நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக உள்ள விஹாரையின் உண்டியலை உடைத்து பணத்தை திருடிய குற்றச்சாட்டில் இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (புதன்கிழமை) பகல் 12.50 மணியளவில் இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் நீதிமன்றத்துக்கு முன்பாக போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த வாழைத்தோட்ட பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்து வாழைத்தோட்டம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (05)

# போதைப் பொருள்களுடன் மோதரையில் ஒருவர் கைது

பல்வேறு வகையான போதைப்பொருள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மோதரை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவரிடம் இருந்து 1.5 கிலோ ஹெரோ யின், 7 கிலோ கேரள கஞ்சா ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

# இராணுவ லெப்ரினன்ட் கைது போதைப் பொருளும் சிக்கியது



பொரலஸ்கமுவ பகுதியில் இராணுவ லெப்டினன்ட் ஒருவர் போதைப்பொருடன் கைது செய்யப்பட்டார் எனப் பொரலஸ்கமுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யுக்திய நடவடிக்கையின் போது மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரியவந்துள்ளது. குருவிட்ட இராணுவப் படையணியில் கடமையாற்றும் லெப்டினன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது காற்சட்டை பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (05)

## வவுனியா சிறையில் உண்ணாவிரதம் இருக்கும்

# வெடுக்குநாறிமலை ஆலய நிர்வாகத்தினரின் நிலை மோசமடைவதற்கு முன் விடுவியுங்கள்

### கஜேந்திரன் எம்.பி. கோரிக்கை

வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டவர்களின் உடல்நிலை மோசமடைவதற்கு முன்னர் அவர்களை விடுவிக்கவேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக தடுப்புக் காவலில் உள்ள ஆலய நிர்வாகத்தினர் 8 பேரையும் வவுனியா சிறைச்சாலையில் அவர் நேரடியாகப் பார்வையிட்டார். அவர்களில் ஐவர் சிறைக்குள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. புதன் கிழமை முதல் அவர்கள் தமது உணவைத் தவிர்க்கத் தொடங்கியுள்ளனர் என்று கூறப்பட்ட நிலையிலேயே கஜேந்திரன் அவர்களைச் சென்று பார்வையிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதுவெடுக்கு நாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் வைத்து பொலிசாரினால் பொய் குற்றச் சாட்டுகள்களின் அடிப்படையில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட 8 பேருக்குமான விள்ளமறியல் நீடிக்கப்பட்டிருந்தது. எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதாக நீதிமன்றம் அறிவித்திருந்தது. கடந்த காலங்களில் இதே வவுனியா நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்களுக்கு கட்டுப்பட்டு அந்த தீர்ப்புக்களின் பிரகாரம் வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ஆலய பூசகர், ஆலய நிர்வாகத்தினர், பக்தர்கள் என 8 பேரை பொய் குற்றச்சாட்டின் அடிப்படையில் பொலிசார் கைது செய்தனர்.

19 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் விரக்தி அடைந்த 8 அப்பாவிகளும் சிறைச்சாலையில் பெரும் குழப்பம் அடைந்து இருக்கிறார்கள். அதில் 5 பேர் உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். நேற்று (12.03) காலை முதல் உணவை எடுக்க மறுத்து உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். இதன்காரணமாக என்ன ஆகுமோ என்ற அச்சம் அவர்களது குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ளது. 8 பேருமே எந்தக் குற்றமும் வெசய்யாத அப்பாவிகள்.

சிறிலங்கா அரசு அதாவது தொல பொருள் திணை திணைக்களம், வனவளத் திணைக்களம், பொலிசார் கூட்டிணைந்து சிங்கள பௌத்தமயமாக்கல் திட்டத்தின் கீழ் அந்த இடத்தில் வழிபாட்டில் ஈடுபடுகின்ற தமிழர்களை விரட்டியடித்து அந்த இடத்தில் பௌத்தமயமாக்க எடுத்த முயற்சி வெற்றியளிக்காத நிலையில் ஆலய பூசகரையும் பக்தர்களையும் கைது செய்திருப்பதன் மூலம் எதிர்காலத்தில் அந்தப் பகுதிக்கு யாரும் செல்ல முடியாத அச்சநிலையை ஏற்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அவர்களை கைது செய்த பின்னரே தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம் என்பவற்றிடம் கடிதங்கள் பெறப்பட்டு அப்பாவிகளை குற்றவாளிகளாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பொய் குற்றச்சாட்டில் உள்ள 8 பேரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். இதில் ஆலய பூசகர் உள்ளிட்ட 5 பேர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இவர்கள் உடல் மோசமடைவதற்கு முன்னர் விடுவிக்கப்பட வேண்டும். இவர்கள் விடுவிக்கப்படாவிட்டால் உடனடியாக வடக்கு- கிழக்கில் போராட்டம் முன்னெடுக்கப்படும். இதற்கான முன்னெடுப்புக்கள் பொது அமைப்புக்கள் மற்றும் சமய அமைப்புக்கள் முன்னெடுத்துள்ளனர்.

பெய்க்குற்றச்சாட்டுக்களை சுமத்திய நெடுங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர் அந்த பொறுப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும். இனவாத செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். புலம்பெயர் வாழ் தமிழ் மக்களும் அவர்களை சிறையில் இருந்து விடுவிக்க இராஜதந்திர அழுத்தங்களை கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

## அரச சார்பற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2022 ஆம் ஆண்டு மிகத்தீவிர பொருளாதார சீர்குலைவுக்கு முகங்கொடுத்திருந்த வேளையில், இலங்கையர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு நல்லாட்சியை உறுதிப்படுத்துமாறும், ஊழல் மோசடிகளை முடிவுக்குக்கொண்டுவருமாறும் வலியுறுத்தினர்.

இருப்பினும் தற்போது மனித உரிமைகளுக்கு அச்சுறுத்தல் விளைவிக்கக்கூடியதும், சாதக மறுசீரமைப்புக்களில் பின்னடைவை ஏற்படுத்தக்கூடியதுமான மிகமோசமான சட்டங்களும், கொள்கைகளுமே வகுக்கப்பட்டுவருகின்றன.

நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற மக்கள் போராட்டங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிபீடமேறுவதற்கு உதவின. ஆனால் ஜனாதிபதி மக்களின் குரலுக்கு செவிசாய்ப்பதற்குப் பதிலாக, அமைதியான முறையிலான கருத்து வெளிப்பாட்டை ஒடுக்க முற்படுகின்றார்.

ஆளும்தப்பால் தயாரிக்கப்பட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான சட்டவரைபு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி தெரிவுசெய்யப்பட்ட சில சிவில் சமூக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டதுடன், அதுபற்றிய பின்னூட்டங்களை சமர்ப்பிப்பதற்கென 3 வாரங்கள் கால அவகாசம் அளிக்கப்பட்டது. அச்சட்டவரைபின் ஊடாக அவசியமான விடயங்கள் எவையும் ஈடேற்றப்படவில்லை.

மாறாக சிவில் சமூக அமைப்புகளை அரசாங்கத்தின் கண்காணிப்பு மற்றும் தலையீட்டின கீழ் கொண்டுவர முற்படுவதுடன், அதில் கூறப்பட்டிருக்கும் நிர்வாக செயன்முறைக்கு அமைவாக இயங்காத அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடிய அச்சுறுத்தலையும் தோற்றுவித்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் மனித உரிமைகள் தொடர்பான தராதரங்களுக்கு மதிப்பளிக்கக்கூடியவகையில் உத்தேச அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான சட்டமூலத்தைக் கைவிடுமாறும், நிகழ்நிலைக்காப்பு சட்டத்தின் பிரயோகத்தை இடைநிறுத்துமாறும், பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தில் அவசியமான திருத்தங்களை மேற்கொள்ளுமாறும் இலங்கை அரசாங்கத்தைப் பகிரங்கமாக வலியுறுத்துவதன் மூலம் சர்வதேச நாணய நிதியமானது அதனூடாக இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் உதவித்திட்டத்தின் செயற்திறன் மற்றும் நம்பகத்தன்மை ஆகி யவற்றை உறுதிப்படுத்தவேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் உள்ளடங்கலாக இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவும் சர்வதேசப் பங்காளிகள், இப்பொருளாதார நெருக்கடிக்கு தவறான ஆட்சி நிர்வாகமும், ஊழல் மோசடிகளுமே பிரதான காரணம் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே அவர்களது முயற்சிகள் வெற்றியடையவேண்டுமேயானால், அடிப்படை சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை ஒடுக்கக்கூடியவகையில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு எதிரான நிலைப்பாட்டில் அவர்கள் உறுதியாக இருக்கவேண்டும் என்றுள்ளது.

# நெடுங்கேணியில் நாளை போராட்டமும் பேரணியும்

வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் சிவராத்திரி பூசையில் ஈடுபட்டசமயம் கைது செய்யப்பட்ட ஆலய நிர்வாகத்தினர் 8 பேரையும் உடனடியாக விடுவிக்க வலியுறுத்தி நெடுங்கேணியில் நாளை வெள்ளிக்கிழமை போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று ஆலய பரிபாலன சபைத் தலைவர் செல்லத்துரை சசிக்குமார் அறிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சிவபக்தர்களை விடுவிக்கக்கோரி பெரும் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை 10 மணிக்கு நெடுங்கேணிச் சந்தியில் போராட்டம் தொடங்கும். அங்கிருந்து பேரணியாக வவுனியா வடக்குப் பிரதேச செயலகம் வரைக்கும் செல்லும். அங்கு இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மற்றும் வெளிநாட்டுத் தூதர்களுக்கான மனுக்கள் கையளிக்கப்படும்.

இலங்கை ஆளும் தரப்புக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் அனைத்து தமிழ் மக்களையும் சமயம் சார்ந்த அமைப்புக்களையும் தமிழ் அரசியல்வாதிகளையும் தமிழ் உணர்வாளர்களையும் சிவில் சமூகத்தினரையும் பல்கலைக்கழக மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஊடக மாணவி செல்விக்கு நிலக்சன் ஞாபகார்த்த பதக்கம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37 ஆவது பட்டமளிப்பு விழாவில், ஊடகவியலாளர் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் இவ் ஆண்டு கிருஷ்ணராஜா செல்விக்கு வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37ஆவது பட்டமளிப்பு விழா இன்று தொடங்குகின்றது. இன்றைய அமர்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறையில் திறமைச் சித்தி பெற்ற மாணவியான இரத்தினபுரி மாவட்டம், கொழும்புகாமம் என்னும் கிராமத்தைச் சேர்ந்த சேர்ந்த கிருஷ்ணராஜா செல்விக்கு இந்தப் பதக்கம் வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடக மாணவனாகப் படித்துக் கொண்டு ஊடகவியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி இலங்கை இராணுவ ஊரடங்கு வேளையில் அதிகாலை 5 மணியளவில் அவரது வீட்டில் வைத்துப் பெற்றோர் முன்னிலையில் ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

நிலக்சனது ஞாபகார்த்தமாக அவருடன் யாழ் இந்துக் கல்லூரியில் ஒன்றாய்க் கற்ற 2004 உயர்தர மாணவர்களால் முன்னெடுக்கப்படும் "நிலா நிதியம்" சார்பில் இந்த விருது வழங்கப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவின்போது ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்பட்டு வருகின்றது. அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் கடந்த ஐந்து ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகின்றது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.03.2024 இல் வெளியிடப்பெற்றது.